Tamil | தமிழ்

# தொழில்நுட்பத்தைத் தவறாகப் பயன்படுத்துதல் உங்களுக்கு நிகழ்கிறதா?

WESNET
The Women's Services Network

## தொழில்நுட்பத்தைத் தவறாகப் பயன்படுத்துதல் என்றால், யாராவது ஒருவர்:

- உங்கள் தொலைபேசியைக் கட்டுப்படுத்துதல்
- உங்கள் தொலைபேசியை உங்களிடமிருந்து பறித்தல்
- உங்கள் தொலைபேசியை உடைத்தல்
- உங்கள் தொலைபேசியைப் பகிரச் செய்தல்.



- உங்கள் இணையக் கணக்குகளைக் கட்டுப்படுத்துதல்
- உங்கள் இணையக் கணக்குகளை நீங்கள் பயன்படுத்துவதை நிறுத்துதல்
- நீங்கள் விரும்பாதபோதும் உங்கள் இணையக் கணக்குகளைப் பயன்படுத்துதல்.




- மற்றவர்கள் பார்க்க வேண்டாம் என்று நீங்கள் விரும்புகின்ற உங்கள் படங்களைப் பகிர்தல்
- நீங்கள் அவர்கள் சொல்வதைச் செய்யாத பட்சத்தில், மற்றவர்கள் பார்க்க வேண்டாம் என்று நீங்கள் விரும்புகின்ற உங்கள் படங்களைப் பகிர்வோம் என உங்களிடம் சொல்லுதல்.



## யாராவது பின்வரும் கருவிகள் மூலம் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைப் பார்த்தால் அது தொழில்நுட்பத்தைத் தவறாகப் பயன்படுத்துதலாக இருக்கலாம்:

- உங்கள் தொலைபேசி
- மறைந்திருக்கும் புகைப்படக் கருவிகள்
- செயலிகள்.



## பின்வரும் காரணங்களுக்காக யாராவது கணினி, தொலைபேசி அல்லது கைக்கணினி (tablet) போன்றவற்றைப் பயன்படுத்தினால், அது தொழில்நுட்பத்தைத் தவறாகப் பயன்படுத்துதலாக இருக்கலாம்:

- திரும்பத் திரும்ப உங்களைத் தொடர்பு கொள்ளுதல்
- உங்களைப் புண்படுத்தும் காரியங்களைச் சொல்லுதல்
- உங்களைத் தண்டித்தல்
- உங்களை அல்லது உங்கள் குடும்ப உறுப்பினரைக் காயப்படுத்துவோம் என்று சொல்லுதல்.




## யாராவது பின்வரும் வகையில் செயலிகள் அல்லது சமூக ஊடகங்களைப் பயன்படுத்தினால் அது தொழில்நுட்பத்தைத் தவறாகப் பயன்படுத்துதலாக இருக்கலாம்:

- உங்களை மோசமாக உணர வைக்கும் காரியங்களைச் சொல்லுதல்
- உங்களையோ அல்லது உங்கள் குடும்பத்தினரையோ மோசமாகச் சித்தரிக்கும் காரியங்களைச் சொல்லுங்கள்
- அவர்கள் உங்களுக்குச் செய்யப் போகும் காரியங்களை வைத்து மிரட்டுதல்.




## பின்வரும் காரணங்களுக்காகத் தொழில்நுட்பத்தை யாராவது பயன்படுத்தினால், அது தொழில்நுட்பத்தைத் தவறாகப் பயன்படுத்துதலாக இருக்கலாம்:

- நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்பதை அவர்கள் கண்டறிவதை நீங்கள் விரும்பாதபோது
- நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை அவர்கள் கண்டறிவதை நீங்கள் விரும்பாதபோது
- உங்களைப் பின்தொடர்வது.



**தொழில்நுட்பத்தைத் தவறாகப் பயன்படுத்தும் சம்பவம் உங்களுக்கு நேரிட்டால், உங்களுக்கான ஆதரவு ஊழியரிடம் பேசவும்.**

நீங்கள் இணையதளத்திலிருந்து கூடுதல் தகவல்களைப் பெறலாம்.
**www.techsafety.org.au**

பெண்களின் சேவைகள் கட்டமைப்பு இந்தச் சுவரொட்டியை உருவாக்கியது.

© 2019 WESNET. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.

3200